**கவனிக்க.-** *09.05.2014 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV(அ) ஆகியவை பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1863 - 2014 මැයි මස 16 වැනි සිකුරාදා - 2014.05.16

*1863 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு மே மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 658 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 663 |

**கவனிக்க .-** *அரசியலமைப்புக்கான இருபத்திரண்டாவது திருத்தச் சட்டமூலம் 2014, ஏப்பிறல் 25 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2014, யூன் மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, மே மாதம் 23 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி - அநுராதபுரம் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2014, ஆனி மாதம் 16 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2014, சித்திரை 25.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| அநுராதபுரம் | ஹெரவப்பத்தானை | மேல் அங்குநாச்சி பகுதியில் குருளு பலாத்த பிரிவில் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், அநுராதபுரம் |

5-390

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி - களுத்துறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2014, ஆனி மாதம் 16 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2014, ஏப்பிறல் 28.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| களுத்துறை | பேருவளை | தர்கா நகர் பகுதி களுத்துறை மற்றும் பாணந்துறை-தொட்டமுனை பிரிவில் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், களுத்துறை |

5-414

---

## விளையாட்டுத்துறை அமைச்சு

தேசிய விளையாட்டு விஞ்ஞானத்துறை நிலையம்

**பதிவாளர்/உதவி விரிவுரையாளர்/பயிற்றுவிப்பாளர்/விடுதி பெண் பொறுப்பாளர் ஆகிய பதவிகளுக்காக ஆட்சேர்ப்புச் செய்தல்**

தேசிய விளையாட்டு விஞ்ஞானத்துறை நிலையத்தில் வெற்றிடமாகவுள்ள கீழே காட்டப்பட்டுள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக அரச சேவையிலுள்ள அலுவலர்களிடமிருந்தும் மற்றும் சிறந்த நன்நடத்தையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்தும் 2014.06.16 ஆந் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் தகைமையானவர்கள் தெரிவுசெய்யப்படுவர். இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியச் சம்பளத்துக்குரித்துடையதுமாகும். விதவைகள், அநாதைகள் ஓய்வூதியச் சம்பள நிதியத்துக்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

| பதவிகள் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|
| (1) பதிவாளர் | பதவி-1 |
| (2) உதவி விரிவுரையாளர் | பதவி-1 |
| (3) விளையாட்டு பயிற்றுவிப்பாளர் | பதவி-1 |
| (4) விடுதி பெண் பொறுப்பாளர் | பதவி-1 |

| பதவி | தகைமைகள் | வயது | சம்பளத் திட்டம் |
|---|---|---|---|
| பதிவாளர் | விளையாட்டு அலுவலர்களின் இணைந்த சேவையின் III-III ஆம் தரத்தில் நிரந்தரமாக்கப்பட்ட 5 வருட திருப்திகரமான சேவைக் காலத்தைக் கொண்டிருத்தல் | | பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் : 06/2006 (IV) MN-7-2006A ரூபா 20,030 11 x 365 - 18 x 500 - ரூபா 33,045 |
| உதவி விரிவுரையாளர் | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து விளையாட்டுப் பாடங்களுடன் கூடிய பட்டம் அல்லது வகுப்புச் சித்தியுடன் பொதுப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல். (விளையாட்டு விடயத்திற்குரிய ஆய்வொன்றை மேற்கொண்டிருத்தல் அல்லது சர்வதேச, தேசிய, மாகாண மட்ட விளையாட்டுப் பின்னணியொன்றைக் கொண்டிருத்தல் விசேட தகைமையொன்றாகக் கொள்ளப்படும்) | 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே அரச சேவையில் உள்ளவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாடு ஏற்புடையதாகாது | பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் : 06/2006 (IV) MN-4-2006A ரூபா 15,215 10 x 215 - 4 x 240 - 7 x 320 - 15 x 360 - ரூபா 25,965 |
| விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் | விளையாட்டுச் சட்டங்களின்கீழ் குறித்த துறைக்குரிய விளையாட்டுக் கட்டுப்பாட்டுச் சபையினால் விநியோகிக்கப்பட்டுள்ள பயிற்றுவிப்பாளர்களுக்கான அனுமதிப்பத்திரத்தைப் பெற்றிருத்தல் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பயிற்றுவிப்பாளரொருவராக விளையாட்டு டிப்ளோமா சான்றிதழொன்றைப் பெற்றிருத்தல் மற்றும் சர்வதேச போட்டிகளில் விளையாட்டுக்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய வீரரொருவராகவிருத்தல் மற்றும் விளையாட்டு அலுவலர்களின் இணைந்த சேவையின் IV ஆம் வகுப்பில் II ஆம் தரத்தில் 10 வருட சேவைக் காலத்தைப் பூர்த்திசெய்திருத்தல் | | பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் : 06/2006 MN-3-2006 கட்டம் 7 ரூபா 15,520 - 4 x 205 - 20 x 290 - 11 x 320 - ரூபா 25,660 |
| விடுதிப் பெண் பொறுப்பாளர் | * சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம் மற்றும் மேலும் இரு பாடங்களுக்கு திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் 6 பாடங்களில் க.பொ.த. (சா. தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ; மற்றும்<br>* க. பொ. த. (உ. தர) பரீட்சையில் குறைந்தபட்சம் ஒரு பாடத்தில் (1) (சாதாரண பொதுப் பரீட்சை தவிர்ந்த) சித்தியடைந்திருத்தல்<br>தொழிற் தகைமைகள் :<br>* குறித்த துறையில் பெற்றுள்ள தொழிற் தகைமைகள் விசேட தகைமையொன்றாகக் கருதப்படும் | 18 வயதிற்குக் குறையாமலும் மற்றும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். | பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் : 06/2006 (IV) MN-1-2006A ரூபா 13,120 - 10 x 145 - 11 x 170 - 10 x 240 - 10 x 320 - ரூபா 22,040 |

| பதவி | தகைமைகள் | வயது | சம்பளத் திட்டம் |
|---|---|---|---|
| | அனுபவம் :<br><br>* அரச அல்லது அரசு சார்ந்த விடுதியொன்றில்/நிறுவனமொன்றில் உதவி மாணவ விடுதி அத்தியட்சகர்/ உதவி விடுதிப் பராமரிப்பாளர்/அல்லது அதற்குச் சமமான அல்லது உயர்ந்த பதவியொன்றில் 2 வருடத்திற்குக் குறையாத அனுபவத்தைக் கொண்டிருத்தல் | | |

**விண்ணப்பிக்கும் முறை**.- கீழே காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்தி 2014.06.16 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக கொழும்பு 7, இலக்கம் 100/7, சுதந்திர மாவத்தையில் அமையப்பெற்றுள்ள தேசிய விளையாட்டுத்துறை விஞ்ஞான நிலையத்தின் பணிப்பாளருக்கு பதிவு அஞ்சலில் அனுப்பி வைத்தல் வேண்டுமென்பதோடு, விண்ணப்பப்படிவத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரைக் குறிப்பிடவும்.

அநுர விஜேசிங்க,
செயலாளர்.

விளையாட்டுத்துறை அமைச்சு,
இலக்கம் 9, பிலிப் குணவர்தன மாவத்தை,
கொழும்பு 7,
2014, மே 16.

மாதிரி விண்ணப்பப்படிவம்

1. விண்ணப்பிக்கும் பதவி :----.

2. (i) முதலெழுத்துக்களுடன் இறுதியில் வரும் பெயர் :----.
   (ii) முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர் :----.
   (iii) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்) :----.

3. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.

4. நிரந்தர முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் :----.

5. (i) நிரந்தர வதிவு மாவட்டம் :----.
   (ii) நிரந்தர வதிவு பிரதேசப் பிரிவு :----.

6. அலுவலக முகவரி :----.

7. பிறந்த திகதி :-

   வருடம் :----. மாதம் :----. திகதி :----.

8. ஆண்/பெண் பால் நிலை :----.

9. திருமணமானவர்/திருமணமாகாதவர் :----.

10. விண்ணப்பப்படிவம் கையேற்கும் இறுதித் திகதிக்கு வயது :

    வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.

11. கல்வித் தகைமை :

| பரீட்சை/ டிப்ளோமா/ பட்டம் (பொது/ விசேட) | வருடம் | தோற்றிய பாடங்கள் | சித்தி/ வகுப்புச் சித்தி | நிறுவனத்தின்/ பல்கலைக்கழகத்தின் பெயர் | மொழி மூலம் |
|---|---|---|---|---|---|
| | | | | | |

12. தொழிற் தகைமை :

| பரீட்சை/ டிப்ளோமா | வருடம் | தோற்றிய பாடங்கள் | சித்தி/ வகுப்புச் சித்தி | நிறுவனத்தின்/ பல்கலைக்கழகத்தின் பெயர் | மொழி மூலம் |
|---|---|---|---|---|---|
| | | | | | |

13. சேவை அனுபவம் :

| சேவை | வகித்த பதவி | காலம் | | நிறுவனம் |
|---|---|---|---|---|
| | | இருந்து | வரை | |
| | | | | |

14. வேறு தகைமைகள் :----.

**விண்ணப்பதாரரின் சான்றிதழ்**

........................................ ஆகிய என்னால் இதில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விடயங்களும் சரியானவையும், உண்மையானவையுமென வெளிப்படுத்துகின்றேன். நான் அரச சேவையிலிருந்து பதவி நீக்கப்படவோ அல்லது கருணை அடிப்படையில் மாற்றீடாக சேவையிலிருந்து இளைப்பாற்றப்படவோ இல்லையெனவும் மற்றும் பதவியை கைவிட்டுச் சென்ற ஒருவராகக் கருதப்படவில்லை எனவும், வெளிப்படுத்துகின்றேன். இதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் எதுவும் போலியானதென அல்லது பிழையானதென நான் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்னர் தெரியவரின் நான் தகுதியற்ற ஒருவராக்கப்படுவதற்கு இணங்குகின்றேன் எனவும், தெரிவுசெய்யப்பட்ட பின்னர் அவ்வாறானதொரு நிலைமையேற்படின் எந்தவொரு நஷ்டஈட்டுத் தொகையுமின்றி பதவியிலிருந்து நீக்கப்பட முடியுமெனவும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**அரச அலுவலரொருவரெனில் திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

திரு./ திருமதி/ செல்வி ........................................................ என்பவரின் விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கின்றேன். அவர் ............................................................ இவ் அமைச்சில்/திணைக்களத்தில் நிரந்தர/அமய/தற்காலிக ஊழியரொருவராகப் பணியாற்றுகின்றாரெனவும், அவர் இப்பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டால் அவரைச் சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது எனவும் அறியத்தருகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்,
பதவி முத்திரை.

திகதி :----.

5-501

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இரத்மலானை இலங்கை-ஜேர்மன் புகையிரதத் தொழில்நுட்ப பயிற்சி நிலையத்திற்காக பயிலுநர்களை சேர்த்துக்கொள்ளல் - 2014

இரத்மலானை இலங்கை-ஜேர்மன் புகையிரதத் தொழில்நுட்ப பயிற்சி நிலையத்திற்கு 2014 ஆம் வருடத்திற்காக பயிலுநர்களைச் சேர்த்துக்கொள்வதற்காக இங்கு 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.

2. **தகைமை :**

(அ) 2014.05.16 ஆந் திகதியன்று வயது வருடம் 16-25 இற்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும் ;

(ஆ) கல்வித் தராதரம்.- சிங்களம்/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் உட்பட 6 விடயங்களில் சித்தியடைந்திருப்பதுடன் ஏதாவது 2 பாடங்களில் திறமைச் சித்தியுடன் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு சித்தியடைந்திருத்தலுடன் முதல் அமர்வில் குறைந்தது 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இக்கல்வித் தராதரத்தை 2013.04.30 இற்கு முன்பு பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

3. **பயிற்சி நெறி**.- பயிலுநர் பயிற்சிக்கு தேர்ந்தெடுக்கப்படும் பயிலுனர்களுக்கு கீழ்க்காணப்படும் தொழில் பயிற்சியை அத்தொழிலுக்கு ஏற்ற காலவெல்லைக்குள் கற்பதற்கு இடமளிக்கப்படும். பயிற்சிநெறி சிங்கள மொழி மூலம் மாத்திரமே நடாத்தப்படும். கீழ்க்காணப்படும் தொழில் பயிற்சிக்கு 25 பேர் வீதம் தேர்ந்தெடுக்கப் படுவர் :-

| | | |
|---|---|---|
| 1. | டீசல் என்ஜின் இயந்திரநுட்பவியலாளர் | - வருடம் 2 1/2 |
| 2. | ஓட்டும் நுட்பவியலாளர் | - வருடம் 3 |
| 3. | மின்நுட்பவியலாளர் (சக்தி) | - வருடம் 3 1/2 |
| 4. | இயந்திரவியலாளர் (பொது) | - வருடம் 3 1/2 |

4. **விண்ணப்பம்**.- விண்ணப்பதாரியினால் இதன்கீழ் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்பத்திரத்திற்கு ஏற்ப தட்டச்சு கடதாசியில் (ஏ4) தயாரித்து சரியான முறையில் குறிப்பிடல் வேண்டும். தேவையான தகவல்கள் உள்ளடக்கப்படாத விண்ணப்பப்பத்திரங்கள் நிராகரிக்கப் படும்.

5. **பயிற்சிநெறிக்கு தேர்ந்தெடுத்தல்**.- (i) பயிற்சிநெறிக்கு எழுத்துமூலம் மற்றும் தொழில் பரிசோதனை மூலம் தேர்ந்தெடுக்கப் படுவதுடன் தேவையான தகைமைகளை உடைய 7 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைக் கட்டணம் செலுத்திய விண்ணப்பதாரிகள் மாத்திரம் எழுத்துமூல பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

(ii) **எழுத்துமூலப் பரீட்சை**.- கணிதம் மற்றும் அடிப்படை தொழில்நுட்ப அறிவும் பொது அறிவையும் அடிப்படையாகக் கொண்டு நடாத்தப்படும் எழுத்துமூலப் பரீட்சையில் கூடிய புள்ளியினைப் பெற்ற விண்ணப்பதாரிகள் அந்தந்த பயிற்சிநெறியின் தன்மைக்கு ஏற்ப தொழில் மற்றும் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர்.

(iii) எழுத்துமூல மற்றும் தொழில் பரிசோதனையில் அதிக முழுப்புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகள் அந்தந்த பயிற்சி நெறிக்கு தேர்ந்தெடுக்கப்படுவர்.

6. **பரீட்சை மொழி மூலம்**.- பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும்.

7. **பரீட்சைக் கட்டணம்**.- இப்பரீட்சைக்காக மீண்டும் வழங்கப்படாத 500 ரூபாவை பரீட்சைக் கட்டணமாக அறவிடப்படும். அக்கட்டணம் மருதானை தபால் அலுவலகத்தில் மாற்றிக்கொள்ளக்கூடியவாறு புகையிரத பொது முகாமையாளர் எனும் பெயருக்கு எழுதப்பட்ட காசுக் கட்டளையை விண்ணப்பதாரியின் விண்ணப்பப்பத்திரத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். காசுக் கட்டளை இணைத்து அனுப்பப்படாத விண்ணப்பப்பத்திரம் நிராகரிக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றாத காரணத்தினாலோ அல்லது வேறேதும் காரணத்திற் காகவோ பரீட்சைக் கட்டணம் மீண்டும் வழங்கப்பட மாட்டாது.

8. **பரீட்சை நிலையம்**.- சகல தகைமைகளையும் பூர்த்திசெய்த விண்ணப்பதாரிகளுக்காக கொழும்பில் மாத்திரம் பரீட்சை நடாத்தப்படும்.

9. **ஒப்பந்தம் கைச்சாத்திடல்**.- நிறுவனத்தின் பயிற்சிக்காக தேர்ந்தெடுக்கப்படும் சகல விண்ணப்பதாரிகளும் பயிற்சிநெறிக்கு ஏற்ற காலவெல்லைகளுக்குள் பயிற்சியை திருப்திகரமான முறையில் பயிலுவதாக தேசிய பயிலுநர் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அதிகார சபையுடன் ஒப்பந்தமொன்றுக்கு இணங்குதல் வேண்டும்.

10. இப்பயிலுநர்களுக்கு தொழில் வழங்கப்படும் என்ற உத்தரவாதம் இல்லை.

11. கீழ்க்காணப்படும் மாதிரி விண்ணப்பப்பத்திரத்தை தயாரித்து "பணிப்பாளர், இலங்கை புகையிரத ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிலையம், கல்தமுல்ல வீதி, இரத்மலானை" எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். (விண்ணப்பத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'இலஜேபதொநி-2014' எனக் குறிப்பிடல் வேண்டும்.

12. **விண்ணப்பப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி**.- விண்ணப்பப்படிவம் 2014.06.20 ஆந் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் தாமதித்து கிடைக்கும் விண்ணப்பப் பத்திரம் நிராகரிக்கப் படும்.

பி. ஏ. பி. ஆரியரத்ன,
புகையிரத பொது முகாமையாளர்.

புகையிரத முகாமையாளர் அலுவலகம்,
கொழும்பு 10,
2014.

மாதிரி விண்ணப்பப்படிவம்

### இரத்மலானை இலங்கை-ஜேர்மன் புகையிரதத் தொழில்நுட்ப பயிற்சி நிலையத்திற்காக பயிலுநர்களை சேர்த்துக்கொள்ளல் - 2014

1. முழுப்பெயர் (சிங்களம்/தமிழ்) :----.
   (ஆங்கிலத்தில்) :----.

2. முகவரி (சிங்களம்/தமிழ்) :----.
   (ஆங்கிலத்தில்) :----.

3. மாவட்டம் :----.

4. பிறந்த திகதி :----.

5. பால் (ஆண்/பெண்) :----.

6. கல்வித் தராதரம் (க. பொ. த. சாதாரண தரம்) :

*முதல் அமர்வு*

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |

*இரண்டாம் அமர்வு*

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |

7. பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :----.

8. விண்ணப்ப அறிவித்தலின்படி தேர்ந்தெடுத்துள்ள தொழில் பயிற்சி :

(1) :----.
(2) :----.

9. ............................................ தபால் அலுவலகத்திற்கு 500 ரூபாவைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட இலக்கம் ....................................... ஐ உடைய காசுக் கட்டளையை இத்துடன் இணைத்துள்ளேன்.

10. மேற்குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதெனவும் சரியானதெனவும் நான் உறுதிப்படுத்துகிறேன். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களில் ஏதேனும் பொய்யானதென நான் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்பு கண்டுபிடிக்கப்படுமிடத்து நான் தகுதியற்றவராக்கப்படுவதற்கும் தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்பு கண்டறியப்படுமிடத்து பயிற்சியிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் நன்கறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

5-340

## இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் வழங்கப்படும் அமெச்சூர் வானொலி இயக்குநர்களின் திறமைச் சான்றிதழ்களுக்கான பரீட்சை

**திறமைச் சான்றிதழ்களுக்கான வகைகள் :**

(அ) அமெச்சூர் வானொலி இயக்குநரின் உயர்தர வகுப்பு திறமைகாண் சான்றிதழ் ;
(ஆ) அமெச்சூர் வானொலி இயக்குநரின் பொது வகுப்பு திறமைகாண் சான்றிதழ் ;
(இ) அமெச்சூர் வானொலி இயக்குநரின் புதுப் பயிலுநர் திறமைகாண் சான்றிதழ்.

2. **பரீட்சைக்குத் தோற்றுவதற்கான ஆகக் குறைந்த தேவைப்பாடுகள்.**- இப்பரீட்சை எடுக்க விரும்பும் ஒவ்வொருவரும் பதினான்கு (14) வயது அல்லது அதற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.

3. **பரீட்சைத் திட்டம் :**

(அ) *உயர்தர வகுப்பு.*- பரீட்சை இரு பகுதிகளைக் கொண்டுள்ளது:-

*பகுதி 1* : இரண்டு எழுத்துமூல வினாத்தாள்களுக்கு ஒரே அமர்வில் விடையளித்தல் வேண்டும்.

வினாத்தாள் I - உயர் மின்னியல் தொழில்நுட்ப வானொலித் தொலைத்தொடர்புகள் (3 மணித்தியாலங்கள்)

வினாத்தாள் II - உரிமம் அளிப்பதற்கான நிபந்தனைகள், இயக்கும் பயிற்சிகள், அவதான நடவடிக்கை முறைகள் - (2 மணித்தியாலங்கள்)

*பகுதி 2* : செயல் முறை மோர்ஸ் (Morse) கோட் பரீட்சை (ஒரு நிமிடத்தில் 05 சொற்கள்)

(ஆ) ***பொது வகுப்பு.***-

இரண்டு எழுத்துமூல வினாத்தாள்களுக்கு ஒரே அமர்வில் விடையளித்தல் வேண்டும்.

வினாத்தாள் I - அடிப்படை மின்னியல் தொழில்நுட்ப வானொலித் தொலைத்தொடர்புகள் (2 மணித்தியாலங்கள்)

வினாத்தாள் II - உரிமம் அளிப்பதற்கான நிபந்தனைகள், இயக்கும் பயிற்சிகள், அத்துடன் நடவடிக்கை முறைகள் - (1 மணித்தியாலம்)

(இ) ***புதுப் பயிலுநர்.-***

இரண்டு எழுத்துமூல வினாத்தாள்களுக்கு ஒரே அமர்வில் விடையளித்தல் வேண்டும்.

வினாத்தாள் I - அடிப்படை மின்னியல், வானொலி மற்றும் இலத்திரனியல் கோட்பாடுகள் - (2 மணித்தியாலங்கள்)

வினாத்தாள் II - உரிமம் அளிப்பதற்கான நிபந்தனைகள், இயக்கும் பயிற்சிகள், அத்துடன் நடவடிக்கை முறைகள் - (1 மணித்தியாலம்)

4. **பரீட்சைகளுக்கான நிபந்தனைகள்.**- எல்லாத் திறமைச் சான்றிதழ்களின் பகுதிகளுக்கும் பின்வரும் நிபந்தனைகள் ஏற்புடையனவாதல் வேண்டும் :-

(i) பரீட்சையில் சித்தியடைவதற்கு பரீட்சார்த்திகள் எல்லாப் பகுதிகளிலும் சித்தியடைதல் வேண்டும்.

(ii) பரீட்சார்த்திகள் இப்பரீட்சையின் பகுதி 1 இல் (இரண்டு எழுத்துமூல வினாத்தாள்கள்) ஒரே அமர்வில் சித்தியடைதல் வேண்டும் ;

(iii) இப்பரீட்சையின் பகுதி 1 இல் சித்தியடையும் பரீட்சார்த்திகள் மட்டுமே பகுதி 2 இற்கு தோற்றுவதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

5. **பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம்.**- இப்பரீட்சை ஆங்கில மொழி மூலம் மாத்திரம் நடாத்தப்படும்.

6. **பரீட்சைக் கட்டணம்.**- பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமையுடையவர்கள் தங்களின் பரீட்சைக் கட்டணங்களை இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவுக்கு அனுப்புமாறு வேண்டப்படுகின்றனர். மேலும் விபரங்கள் தேவைப்படின் தொலைத்தொடர்புகள் பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகத்துடன் எழுத்துமூலம் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

பரீட்சைக் கட்டணமானது இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் பேரில் காசுக்கட்டளையாகவோ அல்லது எந்தவொரு வங்கியினதும் காசோலையாகவோ செலுத்தப்படலாம்.

விண்ணப்பப்படிவமானது, பதியப்பட்ட ஒப்படைப்பு மூலம் அல்லது பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும். அல்லது நேரடியாகக் கொண்டு வந்து கொடுக்கப்படுதல் வேண்டும். உத்தியோகபூர்வ பற்றுச்சீட்டு வைத்திருக்கப்படுதல் வேண்டும் ஏனெனில் தபால் மூலம் அனுப்பப்பட்டதற்கான அல்லது நேரடியாகச் சமர்ப்பிக்கப்பட்டதற்கான நிரூபணம் சமர்ப்பிக்கப்பட்டாலன்றி விண்ணப்பப்படிவம் ஒன்று கவனிக்கப்படவில்லை அல்லது தொலைந்து போயிற்று என்ற உரிமைக் கோரிக்கை எதனையும் இலங்கைத் தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு கவனத்திற்கொள்ளாது. கட்டணங்கள் மீளளிக்கப்படமாட்டாது. அத்துடன் அவை ஒரு பரீட்சையி லிருந்து பிந்திய திகதியொன்றில் இன்னொரு பரீட்சைக்கும் மாற்றப்பட முடியாது. தமது விண்ணப்பத்தை மீளப்பெறுகின்ற அல்லது ஏதேனும் காரணத்துக்காக பரீட்சைக்குத் தோற்றமுடியாத பரீட்சார்த்தி எவரும் ஏதேனும் பிந்திய நுழைவுக்காக முழுப் பரீட்சைக் கட்டணத்தையும் செலுத்துமாறு தேவைப்படுத்தப்படுவார்கள்.

| பரீட்சையின் வகை | பகுதி 1 இற்கான கட்டணம் ரூபா | பகுதி 2 இற்கான கட்டணம் ரூபா |
|---|---|---|
| உயர்தர வகுப்பு | 276 | 138 |
| பொது வகுப்பு | 138 | - |
| புதுப்பயிலுநர் வகுப்பு | 138 | - |

7. **விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி.**- பரீட்சை ஒரு வருடத்தில் மூன்று முறைகள் நடாத்தப்படும். பரீட்சைத் திகதி, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பின்னர் அறிவிக்கப்படும். விண்ணப்பங்கள் தோதான நுழைவுப் படிவத்தில் செய்யப்படல் வேண்டும். அப்படிவங்கள், கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரியில் பெறப்பட்டு, பூர்த்தி செய்யப்பட்டு அம்முகவரிக்கு விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்பதாக அனுப்பப்படல் வேண்டும் :-

தொலைத்தொடர்புகள் பணிப்பாளர் நாயகம்,
276, எல்விட்டிகல மாவத்தை,
மனிங் ரவுன்,
கொழும்பு 8.

| சான்றிதழ்களின் வகை | இறுதி நுழைவுத் திகதி |
|---|---|
| உயர்தர வகுப்பு | |
| பொது வகுப்பு | 2014.06.09 |
| புதுப்பயிலுநர் வகுப்பு | |

8. **அத்தாட்சிப்படுத்தல்.**- பரீட்சார்த்தியின் கையொப்பம் பின்வரும் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும் :-

சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசுத் தரைப்படை, கடற்படை அல்லது வான்படை ஆகியவற்றின் ஆணையளிக்கப்பட்ட அலுவலர், வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரசுரிக்கப்பட்ட பொலிஸ் அலுவலர், அரசாங்க சேவையில் ஆண்டொன்றுக்கு 4,93,920 ரூபாவுக்குக் குறையாத திரட்டிய சம்பளம் பெறும் நிரந்தரப் பதவி வகிக்கும் அலுவலர்.

இவ்வாறு அமையாத மற்றைய விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

9. **பரீட்சார்த்திகளை அடையாளம் காணல்.**- பரீட்சையில் பரீட்சார்த்தி ஒருவர் தமது ஆளடையாளத்தைக் காட்டுமாறு தேவைப்படுத்தப்படுவார். அதற்காக பின்வரும் ஆவணங்களில் எதுவும் ஏற்றுக் கொள்ளப்படும் :-

(அ) அஞ்சல் மா அதிபதியால் வழங்கப்பட்ட செல்லுபடியான ஆளடையாள அட்டை ;

(ஆ) செல்லுபடியான கடவுச்சீட்டு ;

(இ) ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை.

எல்லாப் பரீட்சார்த்திகளும், 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கப் பரீட்சைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய செயல்படுமாறு தேவைப்படுத்தப்படுவார்கள்.

இவ்விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளின் கீழ் ஏற்பாடு செய்யப்படாத விடயம் எதுவும் தொலைத்தொடர்புகள் பணிப்பாளர் நாயகத்தின் தற்றுணிபின் பேரில் தீர்மானிக்கப்படும்.

தொலைத்தொடர்புகள் பணிப்பாளர் நாயகம்.

இலங்கைத் தொலைத்தொடர்புகள்
ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு,
276, எல்விட்டிகல மாவத்தை,
மனிங் ரவுன்,
கொழும்பு 8,
2014, ஏப்பிறல் 29.

5-402

---

**கல்வி அமைச்சு**

பொதுக் கலைத் தகைமை (வெளிவாரி) பரீட்சை (ஆங்கிலப் பாடத்துடன்) மற்றும் விஞ்ஞானமாணி (வெளிவாரி) பட்டத்தின் முதல் பரீட்சையில் சித்தியடைந்த ஆசிரியர்களை பல்கலைக்கழகத்தில் சேர்த்துக்கொள்ளல் - 2013/2014

2013/2014 ஆம் கல்வியாண்டில் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறி களைத் தொடர்வதற்கு இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிப்ப தற்காக பொதுக் கல்வித் தகைமை (வெளிவாரி) பரீட்சை (ஆங்கிலப் பாடத்துடன்) மற்றும் விஞ்ஞானமாணி (வெளிவாரி) பட்டத்தின் முதலாவது பரீட்சையில் சித்தியடைந்துள்ள அரச மற்றும் அரசாங்க அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கொண்ட கலைப்பட்டப் பாடநெறி ;
(ii) விஞ்ஞானப் பட்டப் பாடநெறி.

**2. விண்ணப்பதாரிகள் இதற்காகப் பின்வரும் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும் :**

(i) 2009 ஆம் ஆண்டு அல்லது அதற்குப் பின்னர் நடாத்தப்பட்ட பொதுக் கலைத் தகைமை (வெளிவாரி) பரீட்சை (ஆங்கிலப் பாடத்துடன்) அல்லது விஞ்ஞானமாணி (வெளிவாரி) முதற்பட்டப் பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும். (பரீட்சைப் பெறுபேற்றுப் பிரதியொன்று விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும்.) ;

(ii) விண்ணப்பப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று ஆசிரியராக 5 வருட சேவையைப் பூர்த்திசெய்திருக்க வேண்டியதுடன் நியமனம் நிரந்தரமாக்கப்பட்டதாக இருக்க வேண்டும் ;

(iii) ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, கல்வியியல் கல்லூரி, பல்கலைக்கழகம் என்பவற்றிலோ தேசிய கல்வி நிறுவகத்திலோ பாடநெறிகளைத் தொடர்வதற்காகப் பதிவுசெய்யாதவராக இருக்க வேண்டும் ;

(iv) இவ்விசேட அனுமதியின்கீழ் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப் படுவது பொதுக் கலைத் தகைமை (வெளிவாரி) பரீட்சையில் (ஆங்கிலப் பாடத்துடன்) அல்லது விஞ்ஞானமாணி (வெளிவாரி) பட்டத்தின் முதலாவது பரீட்சையில் பெற்ற மொத்த புள்ளிகள் மற்றும் உரிய பாடங்களுக்கு பெற்ற புள்ளிகளின் அடிப்படையிலாகும். இதற்கு மேலதிகமாக உரிய பல்கலைக்கழகத்தினால் தீர்மானிக்கக்கூடிய வகையில் விஞ்ஞான பட்டப் பாடநெறியை தொடர்வதற்கான தகைமை பெறும் விண்ணப்பதாரர்கள் அப்பல்கலைக்கழகத்தினால் வாய்மூலப் பரீட்சைக்கும் உட்பட வேண்டியதுடன் கலைப் பட்டப் பாடநெறியை தொடர்வதற்கான தகைமை பெறும் விண்ணப்பதாரர்கள் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு வின் மூலம் நேர்முகப் பரீட்சைக்கும் உட்படுத்தப்படுவார்கள் ;

(v) இப்பாடநெறியைத் தொடர்வதற்கு தெரிவு செய்யப்படுவார் களாயின் அவர்களுக்கு கற்கை விடுமுறை வழங்கப்பட்ட வேண்டியபடியால் கற்கை விடுமுறை உரிமை கொண்ட வர்கள் மாத்திரம் விண்ணப்பிக்க வேண்டும்.

3. சம்பளத்துடனான விடுமுறை பெற்றுக்கொள்வதற்குள்ள உரிமைகள் பற்றி நேர்முகப் பரீட்சையின்போது வினவப்படும்.

4. பட்டம் பெற்றுக்கொண்ட பின்பு பட்டதாரி ஆசிரிய நியமனம் வழங்குவதற்கான பொறுப்பை இவ்வமைச்சு ஏற்றுக்கொள்ளாது.

5. அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளில் சேவை செய்யும் ஆசிரியர்களினால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப் பங்களில் அப்பாடசாலையின் அதிபர்/முகாமையாளரால் உரிய ஆசியருக்காக கற்கை விடுமுறை அனுமதிக்கப்பட முடியும்/முடியாது என்பது பற்றி விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட வேண்டும்.

6. அரசாங்க ஆசியர்களின் விண்ணப்பங்கள் அதிபர், வலயக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர்களினாலும், அரசாங்க அனுமதிபெற்ற தனியார் பாடசாலைகளின் ஆசிரியர்களின் விண்ணப்பங்கள் உரிய அதிபர்/முகாமையாளர் ஆகியோராலும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

6. சகல விண்ணப்பப்பத்திரங்களும் இங்கு கீழே குறிப்பிடப்படுகின்ற மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப தயாரிக்கப்பட்டு இரண்டு பிரதிகளாக "கல்விப் பணிப்பாளர், மனிதவள அபிவிருத்திக் கிளை, கல்வி அமைச்சு, 'இசுருபாய', பத்தரமுல்ல" என்ற விலாசத்திற்கு 2014.06.25 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பப்படிவம் இடப்பட்டு அனுப்பப்படும் தபால் உறையின் இடப்பக்க மேல் மூலையில் "2013/2014 இல் இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெறுவதற்கான விண்ணப்பம்" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

அனுர திசாநாயக்க,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
'இசுருபாய',
பத்தரமுல்லை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கல்வி அமைச்சு**

ஆங்கிலத்தைப் பாடமொன்றாகக் கொண்ட பொது கலைத்தகைமை (வெளிவாரி) பரீட்சையில் அல்லது விஞ்ஞான இளமாணி (வெளிவாரி) பட்டப் பாடநெறியின் முதலாவது பரீட்சையில் சித்தியடைந்த ஆசிரியர்களுக்கான பல்கலைக்கழக அனுமதி - கல்வியாண்டு 2013/2014

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
   (ii) முழுப்பெயர் :----.

2. ஆண்/பெண் :----.

3. (i) பதவி :----.
   (ii) தரம் :----.

4. முகவரி -
   சொந்த :----.
   அலுவலக :----.

5. தொலைபேசி -
   வீட்டு இல. :----.
   கையடக்க இல. :----.

6. மின்-அஞ்சல் முகவரி :----.

7. தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள இடம் -

   (i) பாடசாலை :----.
   (ii) வலயம் :----.
   (iii) மாவட்டம் :----.
   (iv) மாகாணம் :----.

8. (i) முதல் நியமனத் திகதி :----.
   (ii) உறுதிப்படுத்தப்பட்ட திகதி :----.
   (iii) சேவைக்காலம் (நியமனத் திகதியிலிருந்து முடிவுத் திகதிவரை) :

   வருடங்கள் ............. மாதங்கள் ............. நாட்கள் .............

9. ஆசிரியராகப் பதிவுசெய்யப்பட்டுள்ள இல. :----.

10. (i) பிறந்த திகதி :

    ஆண்டு :----, மாதம் :----, திகதி :----.

    (ii) வயது (விண்ணப்பத்தின் முடிவுத் திகதி அன்று)

    வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.

11. **தகுதிகாண் பரீட்சையின் விபரங்கள்.**- (பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்ட பெறுபேற்றுத்தாளின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்றும் பெறுபேற்றுத்தாளின் பிரதியொன்றும் இணைக்கப்படல் வேண்டும்.) :

    (i) பரீட்சை :----.
    (ii) பல்கலைக்கழகம் :
    (iii) பெறுபேறு :----.

| பாடம் | வருடம் | புள்ளிகள் | தரம் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |
| 6. | | | |

12. பின்பற்றுவதற்கு எதிர்பார்க்கின்ற பட்டப் பாடநெறியின் பெயரும் பாடங்களும் :

    (i) பட்டத்தின் பெயர் :----.

    (ii) பாடங்கள் :

    (1) -----  (2) -----  (3) -----

13. அனுமதிக்கு எதிர்பார்க்கப்படும் பல்கலைக்கழகத்தின்/பல்கலைக் கழகங்களின் பெயர்களைக் குறிப்பிடுக :

    (1) -----  (2) -----

    (3) -----  (4) -----

14. ஏதாவது ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில், தேசிய கல்விக் கல்லூரியில், பல்கலைக்கழகத்தில் அல்லது தேசியக் கல்வி நிறுவனத் தில் வேறு பாடநெறியொன்றிற்கு பதிவுசெய்யப்பட்டுள்ளீரா ?

    "ஆம்" எனில், அதன் விபரங்கள் :
    ........................................................................................
    ........................................................................................

மேற்படி விபரங்கள் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் உறுதிமொழிகிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

திரு./திருமதி/செல்வி/வண. ........................................................ என்பவர் ...................................................................... இலிருந்து செயற்படத்தக்கதாக .................................................................... இல் (பாடசாலையின் பெயர்) ...................................................... ஆக (பதவி/தரம்) சேவையாற்றுவதுடன், இப்பாடசாலையில் அவரது கடைசிச் சம்பளம் கொடுப்பனவு செய்யப்பட்டது. மேற்படி பட்டப் பாடநெறியைப் பின்பற்றுவதற்கு அவர் விடுவிக்கப்படலாம்/விடுவிக்கப்பட முடியாது என்பதுடன், விண்ணப்பதாரிக்கு அவசியமான கல்விக்கான

விடுமுறையை நான் அங்கீகரிக்கிறேன்/அங்கீகரிக்கவில்லை (சிபாரிசு செய்யா விட்டால், தயவுசெய்து காரணங்களைக் குறிப்பிடுங்கள்) :
...............................................................................................................
...............................................................................................................
...............................................................................................................

சிபாரிசு செய்கிறேன்/செய்யவில்லை.

----,
அதிபர்/முகாமையாளர்,
கையொப்பமும் உத்தியோகபூர்வ முத்திரையும்.

முகவரி :----.
திகதி :----.
சிபாரிசு செய்கிறேன்/செய்யவில்லை.

----,
வலயக் கல்விப் பணிப்பாளர்,
கையொப்பமும் உத்தியோகபூர்வ முத்திரையும்.

முகவரி :----.
திகதி :----.
சிபாரிசு செய்கிறேன்/செய்யவில்லை.

----,
மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
கையொப்பமும் உத்தியோகபூர்வ முத்திரையும்.

முகவரி :----.
திகதி :----.

5-493

## திருத்தம்

### நீர்ப்பாசனத் திணைக்களம்

களஞ்சியப் பொறுப்பாளர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2014

02.05.2014 ஆந் திகதிய 1861 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி I : தொகுதி (II அ) இல் மேற்குறிப்பிடப்பட்ட தலையங்கத்தின்கீழ் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் பின்வருமாறு திருத்தி வாசிக்கப்படல் வேண்டும் :-

12. **பரீட்சைக்கான அனுமதி.**- பரீட்சை இடம்பெறும் தினத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பரீட்சை அனுமதி அட்டை விநியோகிக்கப்படும். அனுமதிப்பத்திரம் இன்றி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர் பரீட்சை மண்டப அதிகாரிக்கு தமது கையொப்பத்தினை உறுதிப்படுத்திய அனுமதி அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டை விநியோகிக்கப்பட்ட உடனேயே அதுபற்றிக் குறிப்பிட்டு செய்தித்தாளில் அறிவித்தல் கொடுக்கப்படும். அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு இரண்டு அல்லது மூன்று நாட்களின் பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காதவிடத்து அதுபற்றி நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். நீங்கள் வைத்திருந்த விண்ணப்பத்தின் உறுதிப்படுத்திய போட்டோப் பிரதியும் பதிவுத்தபாலில் அனுப்பிய பற்றுச்சீட்டையும் கொழும்பிற்கு வெளிப்பிரதேசமாயின், விண்ணப்பம் அனுப்புவதற்கான தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு உங்களது கோரிக்கைக் கடிதத்துடன் அனுப்புவது மிகவும் வினைத்திறனுடையதாக அமையும்.

5-527

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.